# பொன்னியின் செல்வன் கதையில் மகளிரின் பாத்திரப்படைப்பு

11

**முனைவர் கி. இலட்சுமி,**
**உதவிப்பேராசிரியர் மற்றும்**
**தமிழ்த் துறைத் தலைவர் ,**
**ஶ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கல்லூரி, பாரிமுனை, சென்னை- 600001.**
**மின்னஞ்சல் lakshmide.k@gmail.com**

**ஆய்வு நோக்கம்**

காலம் கடந்து நிற்கும் பொன்னியின் செல்வன் வரலாற்று புதினத்தைப் படிக்கப் படிக்க வாசகரிடையே, ஆர்வம் மேலோங்கும். உண்மையும் புனைவும் கலந்து உருக்கொண்ட புதினத்தை சுவையோடும் அழகிய மொழிநடையோடும் எழுதி வரலாற்றில் அழியா முத்திரையைப் படைத்துள்ளார் கல்கி.

வீரம், காதல், நம்பிக்கை துரோகம், மன்னிப்பு, தியாகம், எதிர்பாரா மர்மம், நகைச்சுவை என அனைத்தும் கலந்த இந்த சரித்திர காவியத்தில் பெரும் தாக்கத்தை உண்டாக்கிய பெண் கதாபாத்திரங்கள் அனைவரும் இன்றும் வாசகர் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்று இன்றும், வாழ்பவர்கள். இக்கதாபாத்திரங்களை மீள்பார்வை செய்வதின்வழி கல்கியின் புதினத்தை மகளிர் பாத்திரப்படைப்புவழி ஆராய்வது இவ்ஆய்வின் நோக்கம்.

**முன்னுரை**

பாஞ்சாலி சபதத்தால் ஒரு பாரதம்; கைகேயி சபதத்தால் ஒரு ராமாயணம்; அதைப்போல் நந்தினியின் சபதத்தை சுற்றிப் பின்னப்பட்ட புதினத்திரைக் காவியம்தான் பொன்னியின் செல்வன். பெண்கள் நினைத்தால் நல்லதும் நடக்கும்; நாசமும் விளையும் என்பதை குந்தவை, நந்தினி என்ற இரு நேரெதிர் கதாபாத்திரங்கள் வழி விளக்குகிறார் கதையாசிரியர் கல்கி.

பொன்னியின் செல்வன் கதையை இரண்டே வரிகளில் சொல்லி விடலாம். இரண்டாம் பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்திக்குப் பின் யார் அரசுக் கட்டிலில் ஏறுவது என்ற அதிகாரப்போட்டியே இந்த சரித்திர நாவலின் மையக் கரு. இந்தப் போட்டியில் ஆதித்த கரிகாலன், அருள்மொழிவர்மன் தவிர அவர்களின் சிறிய தந்தை மதுராந்தகனும் உள்ளனர். அதனையொட்டிய நிகழ்வுகளை இந்நூல் மிக மிகச் சுவைப்பட பிற்காலச் சோழர்களின் சரித்திரத்துடன் விவரித்துள்ளது.

இந்த நாவலில் வரும் ஆண் கதாபாத்திரங்களுக்கு சமமாகவே பெண் கதாபாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளனர். செம்பியன் மாதேவி, குந்தவை, நந்தினி, பூங்குழலி, வானதி, மந்தாகினி,ராக்கம்மா முதலிய பெண்ணரசிகள் சுயமாக தாங்கள் நினைத்ததை செயல்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களாய் இருந்தார்கள். கம்பீரத்துக்கும், புத்திசாலித்தனத்துக்கும் குந்தவை, அழகுக்கும் ராஜதந்திரங்களுக்கும் நந்தினி, அடக்கத்துக்கு வானதி, துணிச்சலுக்கு பூங்குழலி, தியாகத்துக்கு மந்தாகினி, இறைபக்திக்கு செம்பியன்மாதேவி, பதிபக்திக்கு வானமாதேவி, காதலுக்கு மணிமேகலை

வஞ்சனைக்கு ராக்கம்மா என்று பொன்னியின் செல்வனில் வரும் பெண்மணிகள் ஒவ்வொருவரும் கதையின் ஓட்டத்தோடு இணைந்து சுவையைக் கூட்டியிருப்பார்கள். அவர்களின் மனதிலும் ஊடுருவி அவர்களின் எண்ண ஓட்டத்தையும், மற்ற கதாபாத்திரங்கள் அவர்களைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதையும் சுவைபடச் சொல்லியிருக்கிறது இந்த புதினம்.

**குந்தவை**

குந்தவை என்னும் கதாபாத்திரம், கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் இடம்பெறும் சோழ இளவரசி ஆவார். வரலாற்றில் இடம்பெற்ற குந்தவை நாச்சியாரை சற்றுப் புனைவுடன் இணைத்து இக்கதாபாத்திரத்தை வடிவமைத்துள்ளார் கல்கி.

சுந்தரசோழரின் மகளாகவும் அருள்மொழிவர்மனின் தமக்கையாகவும் வருகிறாள்.சோழ நாட்டு இளவரசி. ஆதித்ய கரிகாலன், அருள்மொழிவர்மரின் சகோதரி.

செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்தவள் குந்தவை தேவி. அழகில் இரதியையும் அறிவில் கலைமகளையும் செல்வவளத்தில் திருமகளையும் ஒத்தவள்' என்கிறார் குந்தவை பற்றி கல்கியே குறிப்பிடுகிறார்.

**கம்பீரமும் பெருந்தன்மையும்**

"இரண்டு முகங்களும் சுந்தர முகங்களாயினும் அவற்றுக்குள் எத்தனை வேற்றுமை! அதில் கம்பீரமும் பெருந்தன்மையும்; இதில் மோகனமும் கவர்ச்சியும்!. (பொன்னியின் செல்வன்,
பாகம் 1, புது வெள்ளம் ,அத்தியாயம்: 23)

என்று வந்தியத்தேவன் கூறுவது முற்றிலும் உண்மையே!

**அன்பும் அறனும்**

செம்பியன் மாதேவி கோவில்களுக்குத் திருப்பணி செய்வதைப் போல,, மருத்துவ சாலைகள் அமைப்பதற்கும், அதனை பராமரிப்பதற்குமான உதவிகளைக் குந்தவை செய்கிறாள். சுந்தர சோழர் நோயுற்று இருந்தமையினால் குந்தவை மனதில் இத்தகைய மாற்றம் ஏற்பட்டு இருக்கலாம் என்று பொன்னியின் செல்வனில் கல்கி கூறுகிறார். சுயமாக வாழவும், சுதந்திரமாக இருக்கவும் விரும்பும் பெண் என்பதால் பழையாறையில், செம்பியன் மாதேவியோடு வசிக்கிறாள். வானதியை அருள்மொழிவர்மனுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவெடுப்பதையும், நந்தினியின் சதிகளை முறியடிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதையும் பார்க்கையில் குந்தவையை நவீன பெண்ணியத்தின் குறியீடாக கல்கி செதுக்கியிருப்பது தெரிகிறது. பராந்தக சுந்தரசோழர்,செம்பியன் மாதேவி , அநிருத்தர், அருள்மொழி உள்ளிட்ட அரசகுலத்தோர் மட்டுமல்லாமல் சோழ நாட்டு மக்கள் அனைவரின் அன்பையும் பெற்றவள் குந்தவை.

**சுயசார்புள்ள பெண்**

நந்தினியைத் தொடக்கத்தில் வெறுத்தாலும் பின்னாளில் அவள் நிலைக்கு இரங்கி, தன் இரக்கப்பண்பினை வெளிப்படுத்துகிறாள்.

அழகில் மட்டுமல்ல அறிவிலும் சிறந்து விளங்கும் குந்தவை எல்லா விஷயங்களிலும் தீர்க்கமாக முடிவெடுப்பவள். அன்பினால் சுற்றத்தை அரவணைக்கும் பண்பு மிக்கவள். சோழ அரசுக்கு எதிரான உள்நாட்டுப் பகையை முறியடிக்க தன்னாலான எல்லா முயற்சிகளை செய்பவள்.சோழ தேசத்தை

உயிராக நேசிப்பவள். இதற்காகவே வெளிநாடுகளைச் சேர்ந்த எந்தவொரு அரசனையும் மணந்து விடக் கூடாது என்று முடிவெடுக்கும் குந்தவை ஆதித்ய கரிகாலனின் நண்பனும் வீரனுமான வந்தியத் தேவன் மீது காதல் கொள்கிறார்.

சுயசார்புள்ள பெண்ணாக குந்தவையை புதினமுழுவதும் வெளிப்படுத்துகிறார் கல்கி.

**நந்தினி**

நந்தினி கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற பெரிய பழுவேட்டரையரை திருமணம் செய்துகொண்ட பழுவூர் இளையராணி ஆவாள்.

நந்தினி தேவியின் அண்ணன் திருமலை. பழுவூர் சிற்றரசரான பெரிய பழுவேட்டரையரை நந்தினி திருமணம் செய்ததை திருமலை விரும்பவில்லை.

**அவமதிப்பும் பழிவாங்கலும் கைகோர்த்தன**

"மந்தாகினியின் புதல்வியாகிய நந்தினியிடம் தாயின் குணாதிசயங்கள் பல இயற்கையில் தோன்றியிருந்தன. ஆனால் தாயை உலகம் வஞ்சித்ததைக் காட்டிலும் மகளை அதிகமாக வஞ்சித்தது. பெற்ற தாயினாலும் கைவிடப்பட்டாள். பிறர் வீட்டில் வளர்ந்தாள். காட்டு மிருகங்களினால் அன்னைக்கு ஏற்பட்ட தொல்லைகளைக் காட்டிலும் நாட்டு மனிதர்களால் மகள் அதிகக் கொடுமைகளுக்கு உள்ளானாள்

இளம் பிராயத்தில் அரச குலத்தினரால் அவமதிக்கப்பட்டதெல்லாம் அவளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்து நிலைத்து விஷத்தினும் கொடிய துவேஷமாக மாறியது. துவேஷத்துக்கு மாற்று அளிக்கக் கூடிய அன்பு என்னும் அமுதம் அவளுக்கு கிட்டவில்லை. அவள் யார் யாரிடம் அன்பு வைத்தாளோ அவர்கள் ஒன்று, அவளை அலட்சியம் செய்து புறக்கணித்தார்கள்; அல்லது துரதிர்ஷ்டத்துக்கு உள்ளாகி மாண்டு போனார்கள். அவளை அவமதித்தவர்களும் அவளால் வெறுக்கப்பட்டவர்களும் மேன்மையுடன் வாழ்ந்தார்கள். ஒரு பெண்ணின் உள்ளத்தை நஞ்சினும் கொடியதாக்குவதற்கு வேறு என்ன காரணங்கள் வேண்டும்?

தன்னை வஞ்சித்தவர்களையும் அவமதித்தவர்களையும் பழி வாங்குவதைத் தவிர அவளுடைய உள்ளத்தில் வேறு எதற்கும் இடம் இருக்கவில்லை. அதற்கு வேண்டிய சூழ்ச்சித் திறன்கள் அன்னையின் கர்ப்பத்தில் இருந்த நாளிலேயே அவளுடைய இரத்தத்தில் சேர்ந்திருந்தன. வாழ்க்கையில் அவள் பட்ட அல்லல்களும் ஏமாற்றங்களும் பயங்கர அனுபவங்களும் அவளுடைய உள்ளத்திலிருந்து இரக்கம், அன்பு முதலிய மிருதுவான பண்புகளை அடியோடு துடைத்து இரும்பினும் கல்லினும் கடினமாக்கியிருந்தன. " ( பொன்னியின் செல்வன், நான்காம் பாகம், மணிமகுடம், அத்தியாயம்:46)

**வல்லமை**

நந்தினிக்கு பன்னிரெண்டு வயதாக இருந்தபோது தஞ்சாவூருக்கு வருகிறாள். அப்போது, சிறுபிராயத்தில் இருக்கும் சுந்தர சோழரின் மகன்களாகிய ஆதித்ய கரிகாலன், அருள்மொழிவர்மர் மற்றும் மகளான குந்தவை ஆகியோருடன் சிறிதுகாலத்தைக் கழிக்கிறார். இதில், பட்டத்து இளவரசாக பின்னாட்களின் முடிசூடப்பட இருக்கும் ஆதித்ய கரிகாலனுக்கு நந்தினி மீது காதல் ஏற்படுகிறது. ஒரு கட்டத்தில் இவர்கள் பிரிய நேரிடுகிறது.

தன் எதிரில் இருக்கும் ஆண்களை மயக்கி, தான் நினைத்த காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் வலிமையும் வல்லமையும் நந்தினிக்கு உண்டு.

**மையக்கதாபாத்திரம்**

இந்த கதையின் நகர்வுக்கு மிக முக்கியமான கதாபாத்திரம் பழுவூர் ராணி நந்தினிதான். கதையின் முக்கியமான திருப்பங்கள் நந்தினியால்தான் நிகழ்கின்றன. கடம்பூர் அரண்மனையில் நடக்கும் சதியாலோசனை கூட்டத்திலிருந்து கதையின் உச்சக்கட்டமான ஆதித்த கரிகாலனின் சாவு வரை நந்தினியே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறாள். அனைவரின் பின்னாலும் நின்று ஆட்டுவிக்கும் ஒரு சூத்ரதாரியாக விளங்குகிறாள்.

**சதியும் சூழ்ச்சியும்**

சிவ பக்தனாக இருந்த மதுராந்தகனுக்கு ராஜ்ஜியம் ஆளும் ஆசையை உண்டு பண்ணியது நந்தினியே! அது மட்டுமில்லாமல் சிற்றரசர்களின் சதியாலோசனை கூட்டத்தை நடத்துவதும் அவளே! பாண்டிய ஆபத்துதவி ரவிதாசனுக்கு சோழ நாட்டுப் பொக்கிஷத்திலிருந்து வேண்டிய பொன்னையும், பொருளையும் தந்து உதவுகிறாள். ரவிதாசனையும், தேவராளனையும் இலங்கைக்குப் போய் அருள்மொழிவர்மனைக் கொல்வதற்கு ஏவி, இலங்கை காசுகளையும் தருகிறாள். சுந்தரச் சோழரை ஊமைராணி போல் நடித்து சித்திரவதை செய்கிறாள்.

**பன்முக பரிமாணங்கள்**

சக்கரவர்த்தியும், முதன்மந்திரி அநிருத்தரும் இருக்க, நந்தினி சோழ நாட்டை இரண்டாகப் பிரித்து ஆதித்த கரிகாலனுக்கும், மதுராந்தகனுக்கும் பிரித்து கொடுத்து சமரசம் செய்ய ஏற்பாடு செய்கிறாள். அதற்கு கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் உடந்தை. ஆபத்துதவிகள் சதியில் சுந்தர சோழரும், அருள்மொழிவர்மனும் தப்பித்துக் கொள்ள, ஆதித்த கரிகாலரை கடம்பூர் மாளிகைக்கு வரவழைத்து அவர் கொலையாவதற்கும் முழுமுதற் காரணமாய் இருக்கிறாள். பழுவேட்டரையர்கள் இருவரின் சாவுக்கும் கூட நந்தினியே மறைமுகக் காரணம். நந்தினி ஒரு அபலையைப் போல அறிமுகமாகி மோகினியாக, சூழ்ச்சிக்காரியாக, இராஜதந்திரியாக, கணவனை நேசிக்கும் பத்தினியாக, சூழ்நிலை கைதியாக... எத்தனை எத்தனைப் பரிமாணங்களை இந்த கதாபாத்திரம் ஏற்கிறது? இத்தனைக்கும் நந்தினி கதாபாத்திரம் கற்பனையானது என்று கல்கி சொன்னாலும் அதை நம்ப நாம் யாருமே தயார் இல்லை என்பதே நந்தினியின் படைப்பு எத்தனை அற்புதமானது என்று உணர்ந்து கொள்ள முடியும்.

**பதில் இல்லை**

பெரிய பழுவேட்டரையரிடம் இறுதியாக நந்தினி விடைபெற்றுக் கொள்ளும் காட்சியில், நம் கண்களிலும் கண்ணீர்த்துளிகள் அரும்புகின்றன. இருப்பினும், நந்தினி இருக்கிறாளா இறந்தாளா மற்றும் தனது சகோதரனான மதுராந்தகன் குறித்து அறிந்தாளா என்னும் கேள்விகளுக்கு புதினத்தில் பதில் இல்லை.

**வானமா தேவி**

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற சோழர் குல அரசியாவார். இவர் சுந்தர சோழரின் மனைவியும், ஆதித்த கரிகாலன் இளைய பிராட்டி குந்தவை அருள்மொழிவர்மன் ஆகியோரது அன்னையும் ஆவார்.

**கற்புக்கரசி**

சுந்தர சோழர் நோயுற்று படுக்கையிலிருந்த போது நொடியும் அவரைப் பிரியாது, அவருக்குத் துணையாக இருக்கிறார். இரவு பகலாக அவரைக் கவனித்து வருகிறார். மலையமான் என்கிற சிற்றரசரின் மகளானவர். மந்தாகினி தேவி சுந்தர சோழரை காண வருகின்ற போது, உடன்பிறவா சகோதரியாக பாவிக்கிறார்.

கணவன் சொல்லைத்தட்டாத கற்புக்கரசியாக, மரபு வழுவாத பெண்ணரசியாக புதினத்தில் இவரது பாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**செம்பியன் மாதேவி**

கண்டராதித்த சோழன், அரிஞ்சய சோழன், சுந்தர சோழன், உத்தம சோழன், ராஜராஜ சோழன் என பல சோழ மன்னர்களுக்கு ஆலோசனை வழங்கும் உயர்ந்த இடத்தில் இருந்தவர் செம்பியன் மாதேவி.

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற சோழ மன்னர் கண்டராதித்தரின் பட்டத்து மகாராணி ஆவார். வரலாற்றில் இடம்பெற்ற செம்பியன் மாதேவியைச் சற்று புனைவுடன் இணைத்து கதாபாத்திரமாக வடிவமைத்துள்ளார் கல்கி.

**மதுராந்தகனின் பிறப்பு**

சிற்றரசராக இருந்த மழவரையர் வம்சத்தில் செம்பியன் மாதேவியார் பிறந்தார். சிறுவயதிலிருந்தே சிவ பெருமான் மீது பற்றுடன் இருந்தார். பக்தி மிகுந்து சிவனையே கணவனாக அடைய பார்வதிதேவி, தாட்சாயனி போல எப்போதுமே கோவிலில் தவம் செய்கிறாள். மங்கை பருவம் அடைந்த பின்னும் சிவ சிந்தனை மிகுந்து தன் எண்ணத்தில் தளராமல் வாழ்கிறார்.

தன்னைப்போலவே சிவசிந்தனையில் இருக்கும் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள கண்டராதித்தர் விரும்புகிறார். செம்பியன் மாதேவியும் சிவபக்தரான கண்டராதித்தரை ஏற்றுக் கொள்கிறாள்.

இருவரும் நெடுங்காலம் பிள்ளைபேறு வேண்டாமென இருக்கிறார்கள். ஆனால் மற்ற பெண்கள் எல்லோரும் குழந்தையுடன் மகிழ்வதை கண்டு செம்பியன் மாதேவியின் தாய்மையுணர்வு விழித்துக் கொள்கிறது. அதன்படியே மதுராந்தகத் தேவனும் பிறக்கிறார். சிவபக்தனாக மதுராந்தகத் தேவனை இருவரும் வளர்க்கின்றார்கள்.

கண்டராதித்த சோழன் மறைந்தபோது, தம்முடைய மகன் குழந்தையாக இருந்ததால், தன் கொழுந்தனான அரிஞ்சய சோழனை அரசனாக்கியவர் இவரே!

சுந்தர சோழனின் குழந்தைகளான ஆதித்த கரிகாலன், குந்தவை, அருள்மொழிவர்மன் ஆகியோரை வளர்த்தவர்.

பொன்னியின் செல்வன் நாவலில் போலியான மதுராந்தகச் சோழனை இவர் வளர்ப்பதாகவும் பிறகு உண்மையான மதுராந்தகச் சோழன் பட்டம் ஏற்பதாகவும் வருகிறது.

**அரசுரிமைக்குத் தடை**

பழுவூர் இளையராணி நந்தினியின் சதியால், சிவபக்தனாக இருந்த மதுராந்தகன், அரசாள ஆசை கொள்கிறான். ஆனால் செம்பியன் மாதேவியோ தனது கணவரின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தன் மகன் மதுராந்தகனின் அரசுரிமை ஆசைக்குத் தடையாக இருக்கிறார்.

**சேந்தன்அமுதனின் தாய்**

ஊமை வாணியின் வளர்ப்பு மகன் சேந்தன் அமுதன், செம்பியன் மாதேவி பெற்ற மகனே! சேந்தன் அமுதன் தனக்கு அரசுரிமை வேண்டாமெனக் கூறி, பூங்குழலியுடன் சிவபக்தியில் ஈடுபட விரும்புவதாக கூறுகிறார். செம்பியன் மாதேவியும் மகனின் விருப்பம் தன்னுடைய விருப்பத்தினை ஒத்து இருப்பதை அறிந்து இன்புறுகிறார்.

**வானதி**

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற கொடும்பாளூர் இளவரசி ஆவார். அருண்மொழி வர்மன் மீது, காதல் கொள்பவளாகவும், இளைய பிராட்டி குந்தவை நாச்சியாரின் நல்தோழியாகவும் வருகிறார். கொடும்பாளூர் சிற்றரசரும் சோழநாட்டு சேனாதிபதியுமான பூதிவிக்கிரம கேசரியின் சகோதரரின் மகள் வானதி தேவியார். சுந்தர சோழனின் காலத்தில் இவளுடைய தந்தை ஈழத்துப் போரில் உயிரிழக்கிறார்.

அருண்மொழி வர்மனின் அக்காவான குந்தவைக்கு வானதியை அருண்மொழிக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று ஆசையிருக்கிறது. சோழ நாட்டின் சேனாதிபதி கொடும்பாளூர் பெரிய வேளாருக்கும் (வேளிர்) அதே ஆசை இருக்கிறது.

**அச்சமும் துணிவும்**

கொடும்பாளூர் இளவரசியாக இருந்தாலும் வானதி அடிக்கடி மயங்கி விழுகின்ற கோழைப் பெண்ணாகவே அறிமுகம் செய்கிறார் ஆசிரியர் கல்கி. ஆனால், கதையின் பிற்பகுதியில் வீரமும் தீரமும் நிறைந்தவளாக மாறுகிறாள்.

அருண்மொழி மீதான காதலால் அரச குடும்பத்து பெண்கள் செய்ய யோசிக்கும் பெரும் தியாகத்தை செய்ய துணிவாள் வானதி! பிற்காலத்தில் வானதி தேவியார் இராசராச சோழன் மனைவியும், இராசேந்திர சோழன் தாயும் ஆவார்.

**மணிமேகலை**

கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வருகின்ற சிற்றரசர் செங்கண்ணர் சம்புவரையரின் மகள் ஆவாள். மேலும் வந்தியத்தேவனின் நண்பனான கந்தமாறனின் சகோதரியாகவும், வந்தியத்தேவனை நேசிப்பவளாகவும் வருகிறாள்.

**தூயஅன்பு**

ஐந்துதொகுப்பாக வெளியான பொன்னியின் செல்வனில் கடைசி பாகத்தில் தான் மணிமேகலை பாத்திரம் அறிமுகமாகும். ஆனால் வாசகர்களால் மறக்கவே முடியாத அளவுக்கு அப்பாத்திரத்தின் வீரியம் கதையில் சொல்லப்பட்டிருக்கும். செவி வழிச் செய்திகளாலேயே வந்தியத்தேவன் பற்றி மணிமேகலைக்கு தெரிய வரும். ஆனால் அவளது உள்ளத்தில் மிக எளிதாக சிம்மாசனம் இட்டு அமர்ந்து விடுவார் வந்தியத்தேவன். தன் மீது காதல் பொழியும் எல்லாப் பெண்களையும் புறந்தள்ளிச்

சென்ற வந்தியத் தேவனால் மணிமேகலையை உதறித்தள்ள இயலாமல் போயிருக்கும். அவளது தூய அன்பு அவரது உள்ளத்தையும் பாதித்து இருக்குமோ என்னவோ., தயங்கி தயங்கிதான் வந்தியத்தேவன் மணிமேகலையிடம் பேசுவார்

**கொலைப்பழி ஏற்றல்**

தன் காதலை விளக்கி மணிமேகலை பேருவகை கொண்டு நந்தினியிடம் பேசுவாள். இதைக் கேட்டு நந்தினியே சற்று மனமிறங்குவது போல நாவலில் கல்கி எழுதியிருப்பார். அவ்வளவு அப்பாவித்தனம் மணிமேகலையிடம் தென்பட்டிருக்கும். ஆனால் கடைசியில் மணிமேகலை செய்யும் செயலை யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டோம். வந்தியத்தேவன் மீது விழுந்த கொலைப்பழியை ஏற்க சோழ சபையில் முன் வந்திருப்பார். வெறும் ஒரு தலைக் காதலுக்காக தன் தலையே துண்டாடப்பட்டாலும் பரவாயில்லை என்று துணிச்சலோடு எழுந்து நிற்கும் அந்த கதாப்பாத்திரம்.

**தியாக சிகரம்**

இறுதியில் தன் காதலித்த வந்தியத்தேவன் கரங்களில்தான் தன் இன்னுயிரை விடுவாள் மணிமேகலை. கடைசி தொகுப்பிற்கு கல்கி வைத்த பெயர் “தியாகச் சிகரம்”. அருண்மொழி செய்த தியாகத்தை குறிக்கும் வகையில் இப்பெயர் வைக்கப்பட்டிருக்கும். ஒருவகையில் இது மணிமேகலைக்கும் கூட பொருத்தமானதே! ஒரு தலைக் காதலுக்காக, எப்படியும் கை கூடப்போவதில்லை என்று தெரிந்த பின்னும், உயிரைக் கொடுத்து காதலன் உயிர் காக்க முன்வந்த மணிமேகலையும் ஒரு தியாகச் சிகரம் தானே!

**ஊமைராணி மந்தாகினி**

ஊமை ராணியின் உண்மையான பெயர் மந்தாகினி தேவி. இவர் இலங்கையில் படகோட்டும் கரையர் குடும்பத்தை சேர்ந்தவர். வாய்பேச இயலாத காதும் கேளாத மந்தாகினி, இலங்கை தீவுக்கு வரும் சுந்தர சோழனை ஆபத்தான விலங்கிடமிருந்து தாப்பாற்றுகிறார்.சுந்தரசோழனுக்கு மந்தாகினி மீது காதல் ஏற்படுகிறது. உடலும் உயிரும் இணைந்து வாழ்ந்த இருவரும்ஒரு கட்டத்தில் பிரிந்து விடுகின்றனர்.

**பித்தானாள்**

சுந்தர சோழரின் பிரிவை தாங்கிக்கொள்ள முடியாத மந்தாகினி சோழநாட்டுக்கு வந்து சுந்தர சோழனை சந்திக்க முயற்சி செய்கிறார். ஆனால், சுந்தரசோழருக்கு வானவன் மகாதேவியுடன் திருமணமாகி குழந்தைகள் இருப்பதை தெரிந்து கொள்கிறாள். சுந்தர சோழரை சந்திக்க பலமுறை முயன்றும் முடியாமல் போனதால் பித்துபிடித்த பெண்போல அலைகிறாள் மந்தாகினி.

இதனால், பொன்னிநதியில் குதித்து தற்கொலை செய்ய முயற்சி செய்கிறார் மந்தாகினி அப்போது வீரபாண்டியன் அவளை காப்பாற்றி மீண்டும் இலங்கைக்கு அழைத்து செல்கிறார். இதையடுத்து, மந்தாகினிக்கும் வீரபாண்டியனுக்கும் உறவு ஏற்பட்டு இரு குழந்தைகள் பிறக்கின்றனர். அவர்களே நந்தினியும் மதுராந்தக தேவரும் .ஆவர்.

**கண்ணுக்கு புலனாகாத சக்திகள்**

.ஊமைராணியால் பேச இயலாவிடினும் காதுகேளாத பெண்ணாய் இருப்பினும் கண்ணுக்கு புலனாகாத சக்திகள் அவளிடம் உண்டு.

"ஆனால் ஊமை ராணிக்கு அதிகமான வேறு சில சக்திகள் உண்டு. கண்ணால் பார்த்தும், காதால் கேட்டு தெரிந்து கொள்ள முடியாத விஷயங்களை ஆறாவது புலனின் உதவியைக் கொண்டு அவள் கண்டுகொள்வாள்."

( பொன்னியின் செல்வன், நான்காம் பாகம், மணிமகுடம், அத்தியாயம்:18)

**அன்பு என்னும் அமுதஊற்று**

புதினத்தின் இறுதியில் பழுவூர் இளையராணி நந்தினியின் தாய்தான் மந்தாகினி என்று அறிந்து கொள்கிறாள். வீரபாண்டியனின் இரு குழந்தைகளை அரண்மனையில் பெற்றெடுக்கின்றாள். ஆண் பிள்ளையை பாண்டிய இளவரசர் என்று அறியாமல் செம்பியன் மாதேவி வளர்க்கிறார். பெண் பிள்ளையை ஆழ்வார்க்கடியான் வளர்க்கின்றார். தன்னுடைய பிள்ளைகள் மீது கவனம் வைக்காமல் சுந்தர சோழர் பிள்ளையான அருள்மொழிவர்மனையே பிள்ளையாக எண்ணுகிறார்.

"அன்பாகிய அமுத ஊற்று மீண்டும் சுரந்தது. சுந்தர சோழரின் மீது கொண்ட காதலையெல்லாம் அவருடைய அருமைப் புதல்வனாகிய அருள்மொழிச் செல்வனிடம் பிள்ளைப் பிரேமையாக மாற்றிக் கொண்டாள்."( பொன்னியின் செல்வன், நான்காம் பாகம், மணிமகுடம், அத்தியாயம்:46)

மந்தாகினியை தொடக்கத்திலேயே பூங்குழலியின் அத்தையாக அறிந்தாலும், சேந்தன் அமுதனின் பெரியம்மாவாகவும்

நந்தினிதேவி, மதுராந்தகன் தாயாகவும் இறுதிக்கட்டத்தில்தான் அறியமுடிகிறது.

**ஈழத்துராணி சிங்கள நாச்சியார்**

மந்தாகினியை ஊமைப் பெண்ணாகவும், காதுகேளாத பெண்ணாகவும் அறிமுகம் செய்கிறார் புதினத்தின் ஆசிரியர். பல இடங்களில் ஊமைப்பெண் என்றே குறிப்பிடுகிறார். சைகை பாசை பேசி இளவரசர் அருள்மொழிவர்மனுக்கு

வரும் ஆபத்துகளிலிருந்து காக்கும் கடவுளாக மந்தாகினி தேவி வருகிறார். எளிய உடை அணிவதிலும், மக்கள் இல்லாத இடங்களிலும் இருக்க ஆசை கொள்கிறாள். மந்தாகினியின் முகத்தோற்றம் பழுவூர் இளையராணி நந்தினிதேவின் முகத்தோற்றத்தினை ஒத்திருப்பதால் பலர் குழம்பிவிடுகின்றனர்.

முதல் மந்திரி சுந்தர சோழரிடம் மந்தாகினி உயிரோடு இருப்பதை நிரூபிக்க அழைத்து வருகிறார்.பாண்டிய ஆபத்துதவிகளில் ஒருவனான சோமன் சாம்பவன் சுந்தர சோழரைக் கொல்ல எறியும் வேலை தடுத்து மந்தாகினி மரணம் அடைகின்றார்.இறுதியாக சுந்தர சோழருக்கு வரும் ஆபத்திலிருந்து அவரை காத்து தான் மடியும் வரை சோழரின் குடும்பத்தின் மீதான பாசத்தினை வெளிக்காட்டும் அபலைப் பெண்ணாகவே மந்தாகினி வாழ்ந்து மடிகிறார்.

"பிற்காலத்தில் இராஜராஜ சோழர் என்ற பெயருடன் சிங்காதனம் ஏறியபோது 'ஈழத்து ராணி' என்று அவர் அழைத்த மந்தாகினி தேவிக்காகத் தஞ்சையில் ஒரு கோயில் எடுப்பித்தார். அது சில காலம் 'சிங்கள நாச்சியார் கோவில்' என்ற பெயருடன் பிரபலமாக விளங்கி வந்தது."

(பொன்னியின் செல்வன், ஐந்தாம்பாகம், தியாகசிகரம்,அத்தியாயம் :30):

**பூங்குழலி**

பொன்னியின் செல்வன் நாவலில் மிகுந்த உள்ளக் கொந்தளிப்புள்ள மற்றொரு பாத்திரம் பூங்குழலி. தனியாக படகோட்டிச் செல்வது, மிகுந்த துணிச்சலுடன் பிரச்னைகளைச் சமாளிப்பது, வந்தியத்தேவனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் உதவிகளைச் செய்வது என மிக வலுவான பாத்திரமாக பூங்குழலி படைக்கப்பட்டிருக்கிறால். இளவரசன் அருள்மொழிவர்மன் மீது ஆசை கொண்டவளாகக் காட்டப்படும் பூங்குழலி, பிறகு சேந்தன் அமுதனைத் திருமணம் செய்துகொள்கிறாள்.

நாகப்பட்டனத்தில் உள்ள கலங்கரை விளக்கத்தை பார்த்துக்கொள்ளும் தியாகவிடங்கரின் மகள். பூங்குழலி என்றால் பூவைப் போன்ற குழல் (கூந்தல்) உடையவள் என்று பொருள்.

காண்போர் மயங்கும் அழகிய பெண்ணாகவும், பெரும் புயலிலும் தனித்து ஆழ்கடலில் படகோட்டிப் பயணிக்கும் திறனுடையவளாகவும், தேவாரப் பாடல்களையும், சுயமாக பாடல் புனைந்தும் பாடும் வல்லமையுடையவளாகவும் பூங்குழலியின் கதைப்பாத்திரத்தினைக் கல்கி அமைத்துள்ளார்.

**பட்டத்துஅரசி**

கதையின் இறுதிக்கட்ட நகர்வில், பூங்குழலிக்கு சேந்தன் அமுதன் உடன் பழக்கம் ஏற்படும். இருவரும் அதுவரை வெவ்வேறு திக்கில், வெவ்வேறு வாழ்க்கை சூழலில் வாழ்ந்தவர்கள் எனும்போதும் ஆச்சர்யமளிக்கும் வகையில் சட்டென்று இணைந்து கொள்வார்கள். அவர்கள் மனங்களும் இணைந்துவிடும். இருவரும் இணைந்து இறைப்பணி செய்யப்போகிறோம் என்று சொல்வார்கள்., ஆனால் கதையின் இறுதியில் அவர்கள் நினைத்துப் பார்க்காத ஒரு திருப்பம் நிகழும். பூங்குழலி தான் கனவில் கூட நினைக்காத உயரத்தை அடைகிறாள். சேந்தன்அமுதன் அரியணை ஏறும்போது பூங்குழலி பட்டத்தரசி ஆகிறாள்.

**ராக்கம்மா**

வீரபாண்டியனின் மரணத்திற்காகச் சுந்தர சோழரின் குடும்பத்தைப் பழிவாங்க முயற்சிக்கும் பாண்டிய ஆபத்துதவிகளில் ஒருத்தி ராக்கம்மா .அம்முயற்சியில் பழுவூர் இளையராணி நந்தினி தேவிக்கு உதவுகிறாள்.

**முருகைய்யன் மனைவி**

படகோட்டி முருகைய்யனின் மனைவி ராக்கம்மாள் ஆவாள். முருகைய்யனின் தங்கைபூங்குழலி இவளை பணத்தாசை பிடித்தவளாக கருதுகிறாள். பழுவூர் இளையராணி நந்தினி தேவியின் ஆட்கள் இருவர் ஈழத்திற்கு செல்ல வருகிறார்கள். அவர்கள் நிறைய பணம் கொடுப்பதாக கூறியதால் தன் கணவன் முருகைய்யனை ஈழத்திற்கு படகோட்டிச் செல்லுமாறு கூறுகிறாள். அவர்கள் சென்றதும் வந்தியத்தேவனும், வைத்தியர் மகன் பினாகபாணியும் ஈழத்திற்கு செல்வதற்காக வருகிறார்கள். வந்தியத்தேவனைப் பூங்குழலி மறைத்துவைக்கும் இடிந்த மண்டபத்தினைப் பழுவூர் காவலர்களுக்கு காட்டிக் கொடுக்கின்றாள் ராக்கம்மாள்.

இளவரசர் அருள்மொழிவர்மனையும், வந்தியத்தேவனையும் கோடிக்கரைக்கு அழைத்துவரும் பூங்குழலி, நந்தினியும், அண்ணி ராக்கம்மாளும் பேசுவதைக் கேட்கும் போதுதான்,

ராக்கம்மாளும் பாண்டிய ஆபத்துதவியாள் என்பதை அறிகிறாள். மேலும் அவளுக்கு இடிந்த மண்டபம் இருக்கும் இடமும் பூங்கொடியைப் போல சதுப்புக் காடுகளும் தெரிந்திருக்கின்றன என்பது வியப்பாக இருக்கிறது. கதையின் இறுதியிலும் சின்னப்பழுவேட்டரையரின் மகளை இரகசியமாக போலி மதுராந்தகத்தேவரின் இருப்பிடத்திற்கு கொண்டுபோய் சேர்க்கிறாள்.

**வாணி**

ஊமைராணியின் தங்கை மற்றும் சேந்தன் அமுதனின் வளர்ப்புத்தாய். இவளின் கணவன் மூலமாகவே, மதுராந்தகனின் பிறப்பு குறித்த உண்மை வெளிப்படுகிறது.

**முடிவுரை**

துணிவும் மேற்கொண்ட செயலில் வெற்றிபெறும் நோக்கும் ஆண்களைச்சார்ந்து வாழாத சுயசார்பும் உடையவர்களாக, கல்கியின் பொன்னியின் செல்வனில் மகளிர் உலா வருகின்றனர்.அதேவேளையில் அன்பும் தியாகமும் அவர்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளன.இத்தகைய அற்புதமான பெண்கதாபாத்திரங்கள் பொன்னியின் செல்வன் புதினத்தின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்திருந்தன எனில் அது மிகையில்லை.

**துணை நின்ற மின்தரவு நூல்கள்**

**மூலநூல்**

பொன்னியின்செல்வன் மின்புத்தகம்,
https://book.ponniyinselvan.in/part-1/

**துணைமை ஆதாரங்கள்**

பொன்னியின் செல்வன்-தமிழ் விக்கிப்பீடியா
https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AF%8A%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%9A%E0%AF%86%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B5%E0%AE%A9%E0%AF%8D

பொன்னியின் செல்வன் நாவலில் முக்கிய கதாபாத்திரம்.
https://www.vikatan.com/amp/story/spiritual/gods/ponniyin-selvan-historical-trip-in-october-89-and-10th-2022-by-vikatan

பொன்னியின் செல்வனில் பேசப்பட்ட கதாபாத்திரங்கள்
https://www.bbc.com/tamil/arts-and-culture-63066662.amp